**O.S.No.345/2010**

**Date:25.09.2018**

பிரதிவாதி தரப்பு சாட்சி 2 - செல்வம், த-பெ.செல்வம்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும், சாமி கும்பிடுவதை நிறுத்துவதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிராமத்தில் ஐந்து வகை மரியாதைகாரர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஐந்து வகை மரியாதைகாரர்களில் 1ம் பிரதிவாதி எந்த மரியாதை சேர்ந்தவர் என்றால் நாட்டாமை கரையைச் சேர்ந்தவர்கள். 2ம் பிரதிவாத தண்டல் கரை மரியாதையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் பெரியசம்சாரி வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் இல்லை. 7ம் பிரதிவாதி காவல் கரையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி 5ம் மரியாதையான கோனார் கரையைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். ஐந்து மரியாதைகாரர்களும்கிராம நிர்வாக பொறுப்பில் உள்ளனர் என்றால் சரிதான். ஐந்து மரியாதைகாரர்களும் சேர்ந்து புதுப்பட்டி கிராமத்தில் உள்ள கண்மாய் குத்தகை மற்றும் கிராமத்திற்குப் பாத்தியப்பட்ட கடை ஏலம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து நிர்வாகம் செய்வார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்தள்ள நிருபண வாக்குமூலத்தில் நான் எந்த கரையைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தாவா கோவில்களில் உள்ள மரியாதை மற்றும் நிர்வாகம் சம்பந்தமாக தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.286-1968 என்பது தவறு என்றும், அசல் வழக்கு எண்.186-1968 என்பதே சரியானது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல், 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். 2004ம் ஆண்டு மீன் வளத்துறை மீன்பிடி குத்தகை ஏலம் விட்டார்கள் என்றால் சரிதான். எனவே கிராமத்தில் அனைவரும் பேசி 10ம் பிரதிவாதி காந்தி பெயரில் ஏலம் எடுத்து, அதன் பின்னர் கிராமம் சர்பாக ஏலம் விடலாம் என்று முடிவெடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஏலம் மூன்று வருடத்திற்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2004ல் அரசாங்கத்திலிருந்து எவ்வளவு தொகைக்கு ஏலம் கேட்கப்பட்டுள்ளது என்றால்

தெரியாது. மறு ஏலம் கணேசன் என்பவருக்கு ரூ.1,08,000-க்கு விடப்பட்டது என்றால் தெரியாது. அந்த ஏலம் விட்ட தொகையை அரும்பனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் ரூ.75000- வைப்பீடு செய்யப்பட்டது. அந்த தொகை முதிர்வடைந்த பின்னர் ரூ.85000- ஆக 2010ல் எடுக்கப்பட்டது என்றால் எடுத்து கிராமத்தில் ஒப்படைத்தார்கள். அதன்பின்னர் 2005-2006க்கான மீன் பிடிப்பதற்கான ஏலம் யார் எடுத்தது என்றால் தெரியாது. ரூ.85000-க்கு செலவு கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். 1ம் பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில் கிராமத்தில் படித்த இளைஞர்களும், நல்லெண்ணம் கொண்ட பெரியோர்களும் சேர்ந்து திருவிழா நடந்ததாகச் சொல்லியுள்ளது உண்மையா என்றால் சாமி கும்பிட்டது உண்மைதான். சாமி கும்பிட்டதில் சிலர் ஒத்துக் கொள்ளாமல் போட்டி திருவிழா கும்பிட முயற்சித்ததாகச் சொல்லியுள்ளது உண்மையா என்றால் இல்லை. திருவிழா நடத்தியது எல்லா மரியாதைகாரர்களும் சேர்ந்து நடத்தினார்களா என்றால் அனைவரும் சேர்ந்துதான் திருவிழா நடத்தப்பட்டது. அனைத்து மரியாதைகாரர்களும் சேர்ந்து திருவிழா நடத்தவில்லை என்றாலும், வைப்பீடு செய்யப்பட்ட பணத்திற்கு கணக்கு காண்பிப்பதற்காக திருவிழா நடந்ததாக பொய்யாக திருவிழா நடந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2007-2008ம் ஆண்டில் மீன்பிடி ஏலத்தில் கிடைத்த வருமானம் தொடர்பாக காந்தியிடம் கணக்கு கேட்டோமா என்றால் கேட்டோம். அந்த பணத்தை வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. 5, 6 பிரதிவாதிகள் பெரியசம்சாரி மரியாதைகாரர்கள் இல்லை என்றாலும், கோடாங்கி வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவர்கள் பெரிய சம்சாரி மரியாதைகாரர்கள் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஐந்து மரியாதைகாரர்களும் ஊர் பொதுமக்களும் சேர்ந்து சாமி கும்பிடுவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் இல்லை. 1, 3, 4 பிரதிவாதிகளும், 10ம் பிரதிவாதியும் தனிப்பட்ட முறையில் சாமி கும்பிடுவதற்கு உரிமையில்லை என்றால் உரிமை உள்ளது. 1968ம் வருட வழக்கில் ஐந்து கரையின் பொதுமக்களும் சேர்ந்து திருவிழா நடத்த வேண்டும் என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். என் நிருபண வாக்குமூலத்தில் நீதிமன்ற உத்தரவிற்கிணங்க திருவிழா நடத்தியதாக தெரிவித்துள்ள நிலையில் அந்த உத்தரவு எந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டது, வழக்கு எண் என்ன என்றால் தெரியாது. எனக்கு கிராமத்தின் வருமானமே கண்மாயை ஏலம் விடுவது, கிராம கடைகளை ஏலம் விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் என்றால் சரிதான். நான் 1 முதல் 4 பிரதிவாதிகளும், 10ம் பிரதிவாதியும் சேர்ந்து தனிப்பட்ட

முறையில் சாமி கும்பிட முயற்சித்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஐந்து கரை மரியாதைகாரர்கள் மற்றும் கிராம மக்கள் சேர்ந்துதான் சாமி கும்பிட வேண்டும் என்றாலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 10ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் சாமி கும்பிட உரிமையில்லை என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.